# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## EP.No.71/2024

dated : 03.02.2026

R.W.1

Name சின்னத்துரை

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எம்.பி.ஏ படித்துள்ளேன். நான் அரசுப்பணிக்கு விண்ணப்பித்துள்ளேன். எனக்கு தற்போது 42 வயதாகிறது. ஆசிரியர் பணிக்கு விண்ணப்பித்துள்ளேன். அதற்கு தயாராகி வருகிறேன். நான் தற்போது தனியார் பள்ளியில் பணிபுரிந்து வருகிறேன் மாதம் ரூ.8000/- சம்பளமாக கிடைத்து வருகிறது. நான் குடியிருந்து வரும் வீடு என் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. 13.02.2018 ம் தேதி TN-76 AJ-1017 என்ற வாகனத்தின் அடிப்படையில் கடன் ஒப்பந்தம் செய்து கொண்டு ரூ.30,00,000/- கடன் பெற்றுக் கொண்டேன் என்றால் சரிதான். அதை 60 மாதத் தவணைகள் வீதம் திரும்ப செலுத்த ஒப்புக் கொண்டேன். அந்த வாகனம் டிப்பர் லாரி ஆகும். அதனை கனிமங்கள் ஏற்றிச் சென்று இறக்கி வர வாடகைக்கு விட்டு வருமானம் ஈட்டுவதற்காக கடன் பெற்றேன். செலவு போக மாதம் ரூ.50,000/- கிடைத்து வந்தது. 16 மாதங்கள் அவ்வாறு வருமானம் கிடைத்தது. மேற்படி வாகனம் மூன்றுமுறை விபத்துக்குள்ளானது. அதற்கு ரூ.1,50,000/- மற்றும் ரூ.2,00,000/- மற்றும் ரூ.7,00,000/-

காப்பீட்டுத் தொகை போக நான் செலவு செய்தேன். மேற்படி விபத்துக்கள் 2019ம் ஆண்டு ஏற்பட்டது. 60 முதல் 70 சதவிகிதம் மட்டுமே காப்பீடு கிடைக்கும். மீதியை நான் கைப்பணத்தைக் கொண்டு செலவு செய்தேன். தற்போது அந்த வாகனம் எனது நண்பர் கரூரைச் சேர்ந்த சேதுபிரகாஷ் என்பவரிடம் ஒப்படைத்தேன். மாத வாடகை ரூ.50000/- என பேசி அதை ஒப்படைத்தேன். 4 மாதங்கள் மட்டும் வாடகை கொடுத்தார் தற்போது வரை கொடுக்கவில்லை. வண்டியும் திரும்பத்தரவில்லை. 2021ம் ஆண்டு தான்தோன்றிமலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். நான் முதல் தகவலறிக்கை நடவடிக்கை பதிவு செய்ய வேறு சட்டப்பூர்வமான நடவடிக்கை எதையும் மேற்கொள்ளவில்லை. அந்த வாகனத்தை திரும்ப பெற்று மனுதாரர் நிறுவனத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறேன். ஒப்பந்தத்தில் கையெழுத்து செய்யும்போது யாரும் என்னை வற்புறுத்தவில்லை அதன் ஷரத்துக்களை ஒப்புக்கொண்டுதான் கையொப்பமிட்டேன். கந்தசாமி என்பவர் உத்தரவாதம் அளித்து அதன் அடிப்படையில் ஒப்பந்தம் செய்தேன். இந்த நிறைவேறுதல் மனுவை நிறுத்தி வைக்க தடையாணை எதையும் பெறவில்லை. எனக்கு இசைவு நடுவரின் அறிவிப்பு வரப்பெற்றது. இந்த வழக்கின் இசைவு நடுவர் உத்தரவுக்கான விசாரணைக்கு எனக்கு அறிவிப்பு வரவில்லை. இந்த வழக்கின் உத்தரவு எந்த வாகனத்திற்கானது என்று தெரிந்து கொண்டேன். அவ்வாறு தெரிந்து கொண்டபின்னர் அந்த உத்தரவை இரத்து செய்ய நான் நீதிமுறை நடவடிக்கைகள்

எதையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் நொடிப்பு நிலை எய்தியவர் என்று இதுவரை எந்த நீதிமன்றத்திலும் வழக்கு தாக்கல் செய்யவில்லை. நான் இந்த நிறைவேறுதல் மனுவில் கண்ட தொகைக்கு பணம் செலுத்த வசதியில்லை. குறிப்பிட்ட தொகையை தள்ளுபடி செய்து செலுத்தும்படி கூறினாலும் என்னால் செலுத்த இயலாது. வண்டியை ஒப்படைக்கத்தான் நடவடிக்கை எடுத்து வருகிறேன். நான் மனுதாரர் நிறுவனத்தில் மூன்று வாகனங்களுக்காக கடன் பெற்றுள்ளேன். நான் அவ்வாறு மூன்று வாகன கடனுக்கும் மொத்தமாக ஒரு தொகையை செலுத்தி என்னை விடுவிக்கும்படி மனுதாரர் நிறுவனத்தில் கேட்டு வந்தேன் என்றால் சரியல்ல. முதல் 2 வாகனங்களை மனுதாரர் நிறுவனத்தில் ஒப்படைத்துவிட்டேன். நான் மனுதாரர் நிறுவனத்திற்கு பணம் செலுத்தியதற்கான இரசீதுகள் எதையும் தாக்கல் செய்யவில்லை. எனக்கு இரண்டு பெண்குழந்தைகள் உள்ளனர் அவர்கள் செங்கோட்டை ஜெயந்திரா பள்ளியில் படித்து வருகிறார்கள். அதற்கு நான் கட்டணம் செலுத்துவதில்லை. என் பெயரில் எந்த வாகனங்களும் இல்லை. நிலம், வீடு ஏதும் இல்லை. நான் எதிருரை மற்றும் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளை இசைவு நடுவரிடம் கூறாமலும் இசைவு நடுவரின் உத்தரவை எதிர்த்து நீதிமுறை நடவடிக்கைகளை துவக்காமலும் நிறைவேறுதல் மனுவில் இறுதி உத்தரவு பிறப்பிக்கப்படும் நிலையில் கூறுவது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. எனவே மனுதாரர் மனுவில் கூறியதுபோல் நான் தொகை செலுத்த கடமைப்பட்டவர் என்றால்

சரியல்ல. தவறும்பட்சத்தில் உரிமையியல் சிறையில் அடைக்க உத்தரவிடவேண்டுமென்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.02.03 18:14:06 +0530